ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

26.11.2026

1. சண்முகா வேலவா சற்குருநாதா
சங்கடம் போக்கி காத்தருளவே
மண்ணுலகில் என்னை உன் அவதாரமாக்கி
மகா அற்புதம் நடத்தும் வேலவா போற்றி

2. போற்றியே அரங்கமகா தேசிகன் யானும்
பூவுலகில் குருவார அருளாசியாக
உற்றதொரு பராபவ தேள் திங்கள்
உரைப்பேன் ஈராம் குருவார அருளாசியாக

3. ஆகவே சரவண ஜோதி கலந்து
அரங்கன் யான் ஆசி தந்திட
வகையான என் பீடம் வந்து
வணங்கி மக்கள் ஆசி ஏற்று

4. ஏற்று ஞானிகள் பூசை கலந்து
என் வழிகளை தன் வழிகளாக
ஏற்று சன்மார்க்கம் அகலா வாழ
என் தரும வழி பொருளுதவி செய்து

5. செய்து தரும பலம் பெருக்கி
சேவைதனில் உடல் உழைப்பு தந்து
அய்யமற சரணாகதி கொண்டு
அகலா தொண்டர்களாகித் தொடர

6. தொடர அரங்கன் யானும்
தேற்றுகின்ற ஞானபலமிக்க
சீடர்களாகச் சிறந்து வாழ்வில்
செப்பிடுவேன் அரங்கன் சபையில் நிற்பர்

7. நிற்கவே கலியிடரை வென்று
நிலைத் தன்மை கொண்டு
அற்புதம் படைக்கும் என்
ஆற்றல் மிக்க மக்களாய் தேறி

8. தேறியே ஞான உலகம் படைக்கும்
தேசிகன் என் பலம் மிக்கவராய்

மாறியே கலியினில் மாற்றங்கள்
மண்ணுலகம் கண்டிடச் செய்வர்

9. செய்யவே தரும ஞான உலகம்
செந்தமிழ் நாட்டில் துவங்கி
அய்யமற இந்திய தேசமெங்கும்
அனைத்து மாகாணங்கள் நிரம்பி

10. நிரம்பி பேருலகம் எங்கிலும்
நீதிமான்களே வேலவன் ஆசிபட
அருந்தவசி போல் நற்குணம் கொண்ட
ஆளுமைகள் கொண்ட ஞான ஆட்சி

11. ஞான ஆட்சி அமையக் கூடும்
ஞானிகளும் வெளிப்பட இனிதே
தானதருமமும் இயற்கை வளமும் குறையா
தரணியே சிறந்து பாதுகாப்புப் பெறும்
அரங்கன் யான் அருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி